செ.வெ.எண்: 65 நாள்: 28.09.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளாட்சி தேர்தலை சிறப்பாக நடத்தும் வகையில் அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் - மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் 2016 முன்னிட்டு தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான தினசரி ஆய்வுக்கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் (27.09.2016) அன்று நடைபெற்றது.

இந்த தினசரி ஆய்வுக் கூட்டத்தை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது.

தமிழகத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் தேதியினை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதன்படி நமது மாவட்டத்தில் உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் 17.10.2016 மற்றும் 19.10.2016 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ளாட்சி தேர்தலை சிறப்பாக நடத்தும் வகையில் மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதில் தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான தினசரி ஆய்வுக்கூட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் கட்சி சார்புடைய தேர்தல்களுக்கான வாக்குச்சீட்டுகளை அச்சடித்தல் மற்றும் அச்சகங்களை தேர்வு செய்தல், வாக்கு எண்ணும் மையங்களுக்கு கருத்துரு சமர்பித்தல், தேர்தல் நடத்தும் அலுவலர், மண்டல அலுவலர்களுக்கான வாகனங்கள் ஒதுக்கீடு செய்தல், வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான பயிற்சி இடம் மற்றும் தேதி நிர்ணயம் செய்தல், வாக்காளர் சீட்டு அச்சிடுதல் போன்ற பல்வேறு தேர்தல் தொடர்பான தகவல்கள் கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், 11.10.2016க்குள் வாக்குச்சீட்டுகள் அச்சடிக்கும் பணியினை நிறைவு செய்து வாக்குச்சீட்டுகளில் வேட்பாளர்கள் விபரங்கள் மற்றும் தொடர் எண்களை சரிபார்த்து 14.10.2016 அன்று வாக்குச்சாவடிகள் வாரியான வாக்குச்சீட்டுகள் ஒதுக்கீடு செய்து முடிக்கவும், வாக்கு எண்ணும் மையங்களுக்கு அனுமதி கோரும் கருத்துருக்கள் காவல்த்துறையின் தடையின்மைச் சான்றுடன் உடனடியாக அனுப்பி வைக்கவும், வாக்கு பதிவு அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ள நாள் மற்றும் இடம் குறித்த தகவல்களை அனுப்பவும், வாக்காளர் சீட்டுகள் அச்சடிக்கும் பணிக்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலிருந்தும் தேவையான கணினி உதவியாளர்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்களை அனுப்பவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், நமது மாவட்டத்தில் உள்ளாட்சி தேர்தலை சிறப்பாக நடத்தும் வகையில் அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்தக்கூட்டத்தில், திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திரு.சந்தோஷ்குமார், மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.கே.பஞ்சவர்ணம் , உதவிஆணையர் கலால் திருமதி.ஆர்.ஜெயபாரதி, இணை இயக்குநர் வேளாண்மை திரு.அண்ணாமலை, உதவி இயக்குநர் ஊராட்சிகள் (பொ).திரு. முருகண்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**